<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>
<u>அசல் வழக்கு எண். 96/2021</u>
<u>நாள் 08/06/2026 திங்கட்கிழமை</u>

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – தங்கபிரகாஷ் (DW1) | த/பெயர் – ராமநாதன் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

<u>குறுக்கு விசாரணை–</u>

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் அப்பாவிற்கு பூர்வீகமான ஊர் எது என்றால் குமாரநாயகன்பேட்டை, கும்மிடிப்பூண்டி தாலுக்கா ஆகும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்திற்கான பட்டா என்னுடைய தாயார் முனியம்மாள் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தாயார் முனியம்மாள் என்பவருக்கும் என் தந்தை ராமநாதன் என்பவருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் அது பற்றி தெரியாது. அவர்களுக்கு எந்த கிராமத்தில் திருமணம் நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. முனியம்மாள் ராமநாதனின் மனைவி என காண்பிக்க திருமண அழைப்பிதழ்யோ அல்லது கோயிலில் திருமணம் செய்ததற்கான ரசீதோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் முனியம்மாள் ராமநாதனின் மகன் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

வழக்கு சொத்தில் தற்போது யார் குடியிருப்பது என்றால் நான் தான் குடியிருக்கிறேன். அதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் குடும்ப அட்டை, வீட்டுவரி ரசீது, ஆதார் அட்டை ஆகியவை தாக்கல் செய்துள்ளேன். என் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அம்மா முனியம்மாள் பெயரில் உள்ள ரசீதை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பெயரில் வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட எந்த வருவாய் துறை ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான்.

3. முனியம்மாள் பெயரில் இருந்த வழக்கு சொத்திற்கான பட்டா என் பெயரில் மாற்றம் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் பெயரில் வழக்கு சொத்திற்கான எந்த ஆவணமும் இல்லாததால் வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் அம்மா பெயரில் உள்ள ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். பெயர் மாற்றம் செய்யவில்லை. என்னுடைய தந்தை ராமநாதன் எப்போது இறந்தார் என்றால் 19.10.2019 அன்று இறந்தார். நான் தற்போது எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் பரணம்பேடு கிராமத்தில் குடியிருக்கிறேன். என் தந்தை வசித்து வந்த கிராமத்தில் நான் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். என் அம்மாவுடன் தான் இருந்தேன். என் தந்தைக்கு சொந்தமான சொத்து குமரநாயகன்பேட்டையில் உள்ளது என்றால் சரிதான். வீட்டு மனை உள்ளது.

4. 2ம் வாதி மகேஷ் எனக்கு என்ன உறவு என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. முனியம்மாள் என்பவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் நான் மட்டும் தான். நான் தான் முனியம்மாளின் ஒரே மகன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் பெயரில் எந்த ஆவணமும் இல்லாத போது எதன் அடிப்படையில் வழக்கு சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் என் அம்மாவின் சொத்து என்பதால் உரிமை உள்ளது. முனியம்மாள் என் அம்மா என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத போது வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. முனியம்மாவுக்கு வழக்கு சொத்திற்கான பட்டா எப்போது வழங்கப்பட்டது என்றால் 2009 ம் ஆண்டு வழங்கப்பட்டது. பட்டா வழங்கியபோது நான் எங்கு வசித்து வந்தேன் என்றால் பரணம்பேடு கிராமத்தில் தான் வசித்து வந்தோம். எந்த அலுவலகத்தில் பட்டா வாங்கப்பட்டது என்றால் பொன்னேரியில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்தில் வாங்கப்பட்டது. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் 1/24 ஆகும்.

5. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் எனக்கு திசைகள் தெரியாது, ஒரு பக்கம் நான், மற்றொருபக்கம், பன்னீர், மற்றொரு பக்கம் மகாதேவன், மற்றொரு பக்கம் இளங்கோவன் உள்ளனர். வீட்டின் மின்சார இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் என் அம்மா முனியம்மாள் பெயரில் உள்ளது. வழக்கு சொத்திற்காக வருவாய் துறையில் வழங்கப்பட்ட பட்டாவில் முனியம்மாளின் கணவர் பெயர் ராமநாதன் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் மூலம் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடைக்கப்படாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொருத்து முனியம்மாள் அவருடைய மகன் மகேஷ் என்பவருக்கு உயில் சாசனம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தின் 11 வது பத்தியில் வழக்கு சொத்து எனக்கு மட்டுமே

பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றும் அதை நிரூபிக்கும் வகையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் நிரூபிக்கபடவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**